## தமிழ்நாட்டில் மழை:

# வெப்பம் படிப்படியாகக் குறையும்!

### சென்னை வானிலை மையம் தகவல்!

சென்னை, ஏப். 30-
தமிழகத்தில் இன்று முதல் பல்வேறு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன் காரணமாக வெப்பம் படிப்படியாக குறையும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு திசையில் இருந்து வீசும் தெற்கு காற்று, மேற்கு நோக்கி பயணித்து திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை அடுத்து தெலங்கானா, கர்நாடகா உள்பகுதிக்குச் செல்லும் வாய்ப்புள்ளது. அத்துடன் வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளில் காற்றழுத்தம் காணப்படுகிறது.

உயர் அழுத்தம் மற்றும் தென்திசையின் நீராவிக் காற்றும் இணைந்து கடலோர மாவட்டங்களில் மேகம் சூழ்ந்து காணப்படுகிறது. இதையடுத்து, கடலோர மாவட்டங்களில் நேற்று முன்தினம் காலை லேசான மழை பெய்தது. இந்த மேகம் நேற்று முன்தினம் மதியத்துக்கு பிறகு டெல்டாவில் இருந்து விலகிச் சென்று தெற்கு கடலோரம் ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி பகுதி தொடங்கி மேகம் உருவாகி லேசான மழை பெய்தது. தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், கன்னியாகுமரி, தென்காசியிலும் நேற்று முன்தினம் லேசான மழை தென் மாவட்டங்களிலும் ஆங்காங்கே மழை பெய்தது. மழை பெய்ய தொடங்க உள்ளதால் வெப்பநிலை குறையவும் வாய்ப்புள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நேற்று முன்தினம் மழை பெய்துள்ளது. பிற இடங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலை நிலவியது. வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இல்லை என்றாலும், ஒரு சில இடங்களில் இயல்பைவிட 23 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக இருந்தது. அதன் தொடர்ச்சியாக திருச்சியில் நேற்று முன்தினம் 105 டிகிரி வெயில் கொளுத்தியது. வேலூர், ஈரோடு 104 டிகிரி, கரூர், மதுரை, திருப்பத்தூர் 102 டிகிரி வெயில் நிலவியது.

இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 0.9 கிமீ உயரத்தில் வடக்கு தெலங்கானா முதல் குமரிக் கடல் வரை, உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளி மண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலை கொண்டுள்ளது. அதனால் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை நேற்று முன்தினம் பெய்துள்ளது. இது இன்றும் நீடிக்கும். பின்னர் நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 30ம் தேதி முதல் மே 2ம் தேதி வரை கனமழை பெய்யும். 3, 4ம் தேதியின் மிதமான மழை பெய்யும்.

இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கொசுத் தொல்லை தொடர்பாக புகார்கள் வந்தால்

# 48 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### உயர்நீதி மன்றம் உத்தரவு!

சென்னை, ஏப்.30-
கொசுத் தொல்லை மற்றும் கழிவு நீர் தேக்கம் தொடர்பாக புகார்கள் வந்தால் 48 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைநகரான சென்னையில் நாளுக்கு நாள் கொசுத்தொல்லை அதிகரித்து வருவதாகவும், கழிவு நீர் தேக்கத்துக்கு சரியான தீர்வு காணப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டி கோட்டூர்புரத்தைச் சேர்ந்த விஜயராஜா என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில், ``சென்னை மாநகரில் பாரபட்சமில்லாமல் கொசுக்களின் பெருக்கம் அனைத்து பகுதிகளிலும் அதிகரித்து வருகிறது. கொசுக்கடியால் டெங்கு, மலேரியா, சிக்குன் குன்யா போன்ற தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட விரிவாக்கப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை. மழைநீர் வடிகால்களும் முறையாக அமைக்கப்படவில்லை.

பெரும்பாலான குளம், குட்டைகள், மழைநீர் கால்வாய்கள் ஆக்கிரமிக்கப் பட்டு இருந்த இடம் தெரியாமல் உருமாறியுள்ளது. கழிவுநீர் தேக்கத்தால் கொசு உற்பத்தியும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

எனவே கொசுத் தொல்லையை கட்டுப்படுத்தி, கழிவுநீர் தேக்கத்தை அகற்ற மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். அத்துடன் காணாமல் போன நீர்நிலைகளை மீட்டு எடுத்து கழிவுநீர் மேலாண்மையை முறையாக செய்யவும், குறிப்பாக தெருக்களில், சாலைகளில் கழிவுநீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளவும் தமிழக அரசுக்கு அறிவுறுத்த வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது. அப்போது நீதிபதிகள், ''கொசுத் தொல்லை மற்றும் கழிவு நீர் தேக்கம் தொடர்பான பிரச்சினைகள் சென்னையில் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் உள்ளது.

எனவே கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த தமிழக அரசு 4 வார காலத்துக்குள் விரிவான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிட வேண்டும். கட்டுமானப் பகுதிகளில் தண்ணீர் மற்றும் கழிவுநீர் தேங்காத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்க வேசுகாதார விதிகளை மீறும் நிறுவனங்களுக்கும், நபர்களுக்கும் அபராதம் விதிக்க வேண்டும். கொசுத் தொல்லை தொடர்பாக புகார் அளிக்க ஏதுவாக இலவச உதவி எண்ணை அறிமுகம் செய்ய வேண்டும்.

குறிப்பாக இது தொடர்பாக புகார்கள் வந்தால் அந்த புகார்கள் மீது 48 மணிநேரத்துக்குள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

## மதச் சடங்குகளின் போது மதச்சார்பற்ற தன்மைக்குப் பாதிப்பா?

# மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்கலாம்!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி,ஏப்.30-
மத சடங்குகளின் போது மதச்சார்பற்ற தன்மைக்கு பாதிப்பு ஏற்பட்டால் மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சபரிமலைக்கு அனைத்து வயது பெண்களும் செல்லலாம் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான வழக்கு விசாரணை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் நடைபெற்றது. வாதத்தின் போது குறுக்கிட்ட நீதிபதி நாகரத்னா, ஒரு கோயில் தனது மத சடங்குகளை தாராளமாக நடத்தலாம். ஆனால் மதத்தின் பெயரில் பொது சட்ட ஒழுங்கை குலைக்க முடியாது என்று தெரிவித்தார். மத சடங்குகளை செய்யலாம். ஆனால் பொது சாலைகளை மறித்து செய்யக் கூடாது. அப்படி செய்தால் மாநில அரசுகள் எப்போது வேண்டுமானாலும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

மத விவகாரங்களில் நீதிமன்றங்கள் பொதுவாக தலையிடாது. அதே நேரத்தில் மதச்சார்பற்ற நிலைக்கு பாதிப்பு ஏற்படும் போது நீதிமன்றங்கள் தலையிடும் என்று நீதிபதி நாகரத்னா தெரிவித்தார்.

# சொத்துவரி செலுத்துதல்: 5% தள்ளுபடி!

### சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை, ஏப். 30-
சென்னை மாநகராட்சியில் ஏப்.30ம் தேதிக்குள் சொத்து வரியைச் செலுத்துவோர் 5 சதவீதம் தள்ளுபடி பெறலாம் என்று மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2026-27ம் நிதியாண்டு தொடங்கிவிட்டதால், மாநகராட்சியில் உள்ள சொத்து உரிமையாளர்கள், அரையாண்டின் முதல் 30 நாட்களுக்குள் அதாவது வரும் ஏப்ரல் மாதம் 30ம் தேதிக்குள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியைச் செலுத்தினால், மாநகராட்சி சார்பில் சொத்து வரியில் 5 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்துவதோடு மட்டுமில்லாமல், அரசு தரும் இந்த தள்ளுபடியை சரியாகப் பயன்படுத்தினால் அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை மிச்சப் படுத்த லாம். மேலும் ஒரு சதவீத அபராதத் தொகையையும் தவிர்க்கலாம்.

பொதுமக்கள் தங்கள் வரிகளை எளிமையான முறையில் செலுத்த நேரடியாக கணினி வரி வசூல் மையங்கள், https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம், டிஎன் அர்பன் இ-சேவை செயலி மற்றும் யுபிஐ செயலிகள் என பல்வேறு வசதிகள் இருக்கின்றன.

## திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!

திருப்பத்தூர், ஏப். 30-
திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில்வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் வாணியம்பாடியில் உள்ள மாவட்ட கழக அலுவகத்தில் 2.5.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பா ளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## கோடை வெப்பத்தை தணித்து

# டெல்லியை குளிர்வித்த திடீர் மழை!

புதுடெல்லி,ஏப்.30-
தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று காலை மழை பொழிவு பதிவானது. இதன் மூலம் கடந்த சில நாட்களாக அங்குள்ள மக்களை வாட்டி வந்த கோடை வெப்பம் சற்று தணிந்துள்ளது.

மழையுடன் காற்றும் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதால் வெப்பநிலை அங்கு சரிந்துள்ளது. நேற்று காலை டெல்லியின் பல்வேறு பகுதிகளில் மழைப் பொழிவு லேசானதாக ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து திடீரென வானிலை நிலவரம் மாறியது. வானில் கருமேகங்கள் சூழ மழை பொழிவு தொடர்ந்தது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை அன்று 39.2 டிகிரி செல்சியஸ் வெப்பம் டெல்லியில் பதிவானது. கடந்த திங்கட்கிழமை அன்று 42.3 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவானது. டெல்லியில் வெப்ப அலை வீச வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் மஞ்சள் அலர்ட் கொடுத்திருந்தது. இந்தச் சூழலில் மேற்கு சுழற்சியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக நேற்று அங்கு மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


இந்த மழை காரணமாக டெல்லியில் வெப்பநிலை மாறியுள்ளது. இதனால் அங்கு இன்று 27 முதல் அதிகபட்சம் 38 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவும் என தகவல். மழைப் பொழிவு தொடரவும் வாய்ப்புள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மழை காரணமாக டெல்லியில் காற்றின் தரமும் சற்று மேம்பட்டுள்ளது.

மத்திய பாகிஸ்தான் மற்றும் ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட வடமேற்கு பகுதிகளில் நிலவும் சூறாவளி சுழற்சி வடகிழக்கு இந்திய பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள வானிலை மாற்றம் தான் இது என தனியார் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி. சோழன்

### ஏப்ரல் 30 (2001)



பெங்களூர் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர். கர்நாடக மாநில அமைப்பாளராக பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டில் கர்நாடக மாநில தி.மு.க. முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்றதில் விளம்பரச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டதன் விளைவாக, கலப்புத் திருமணத்தை ஏற்கின்ற வகையில் வேறு சாதியைச் சார்ந்த ஒரு கைம்பெண்ணைக் கைப்பிடித்து, அண்ணா அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக 1986ஆம் ஆண்டு தலைமைக் கழகம் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை இவர் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தினார். இதனால் காவல்துறை வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது.

1997ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## வால்பாறை பகுதியில்

# மாசோப்சிஸ் மரங்கள் அழிவு எதிரொலி!

### ஹார்ன்பில் பறவைகள் இடம் பெயர்வு!

வால்பாறை, ஏப். 30–
வால்பாறையில் மாசோப்சிஸ் மரங்கள் அழிவு எதிரொலியாக ஹார்ன்பில் பறவைகள் இடம் பெயர்வு அதிகரித்து வருவது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு கவலையை அளித்துள்ளது. கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் உள்ள சில தனியார் தோட்டங்களில் வளர்ந்திருந்த மாசோப்சிஸ் எமினி (Maesopsis eminii) வகை மரங்கள் பெருமளவில் காய்ந்து அழிந்துள்ளது. இதனால், ஹார்ன்பில் உள்ளிட்ட இருவாச்சி பறவைகளின் வாழ்வியல் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மரங்களின் திடீர் காய்ந்து விட்ட நிலை குறித்து பல்வேறு கருத்துகள் நிலவிய நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு உட்பட்ட வன மரபியல் மற்றும் மர இனப்பெருக்க நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் முக்கிய காரணங்கள் வெளியாகியுள்ளன. அதன்படி, மரங்களின் வேர் பகுதி சேதம், பூஞ்சை தாக்குதல், மண் ஈரப்பத மாற்றம், காலநிலை மாற்றம் ஆகியவை இந்த அழிவுக்கு காரணமாக இருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

மேலும், ஒரே வகை மரங்களை அதிகமாக வளர்த்தல் மற்றும் இயற்கை காட்டு அமைப்பு பாதிப்பு காரணமாகவும் மரங்கள் பலவீனமடைந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மாசோப்சிஸ் மரங்கள் ஹார்ன்பில் போன்ற பெரிய பறவைகளுக்கு முக்கிய உணவான பழங்களை வழங்கி வந்தன. தற்போது இந்த மரங்கள் அழிந்ததால், வால்பாறை பகுதியில் முன்பு அதிகமாக காணப்பட்ட இருவாச்சி பறவைகள் உணவுக்காக இடம் பெயரத் தொடங்கியுள்ளன.

இதனால், ஹார்ன்பில் பறவைகள் தங்களின் இயல்பான உணவில் இருந்து விலகி, உள்ளூர் காட்டு மரங்களில் கிடைக்கும் பழங்கள் மற்றும் காய்களை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. பறவைகளின் இந்த உணவு மாற்றம், அவற்றின் வாழ்வியல் பழக்க வழக்கங்களையும், வன சூழலின் இயற்கை சமநிலையையும் பாதிக்கும் அபாயம் இருப்பதாக இயற்கை ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ஆனைமலை புலிகள் காப்பகம் மானாம்பள்ளி வனச்சரகர் கிரிதரன் கூறுகையில், "மாசோப்சிஸ் மரங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மரங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளுடன் உள்ளூர் மர இனங்களை அதிகரிக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகிறது" என தெரிவித்தார்.

மேலும், மே மாத இறுதியில் உள்ளூர் மரக்கன்றுகள் நடவு பணிகள் தொடங்கப்படவுள்ளதுடன், தென்மேற்கு பருவமழை இதற்கு சாதகமாக இருக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். வால்பாறை மற்றும் சுற்றியுள்ள ஆனைமலை புலிகள் காப்பகம் பகுதிகளில் உயிரின வளத்தை காக்க உடனடி நடவடிக்கைகள் அவசியம் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தரப்பில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

#### உணவு பழக்கத்தில் மாற்றம் ஏன்?

அண்மைக்காலங்களில் உணவு குறைவு மற்றும் வாழ்வியல் சூழல் மாற்றம் காரணமாக ஹார்ன்பில் பறவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்கு முன்பு குஞ்சு பொறித்த ஒரு ஜோடி பறவைகள் தற்போது அதே பகுதியில் தொடர்ந்து காணப்படுகின்றன.

அவற்றுடன் சேர்த்து மொத்தம் 3 பறவைகள் மட்டுமே தற்போது தென்படுகின்றன என உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். மாசோப்சிஸ் மரங்கள் அழிந்ததால், இப்பறவைகளின் முக்கிய உணவான பழங்கள் குறைந்து, உள்ளூர் மரங்களில் கிடைக்கும் உணவுகளுக்கு மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. பொன்னுரங்கம்

### ஏப்ரல் 30 (2021)



கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.